**சென்னை-6, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர்(தொஅ) பொ**
**அவர்களின் செயல்முறை ஆணை**
**முன்னிலை : மரு.ஜெ.ராஜமூர்த்தி, M.B.B.S., D.C.H.,**

**ந.க.எண்.18900/தொஅ/அந/1/2019** **நாள்: 01.11.2022.**

பொருள்: அலுவலக நடைமுறை – தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திரு.வி.வினோத் ராஜ்குமார். தா/பெ.(அமரர்) திருமதி.ஞா.வைலட் தேவகுமாரி, முதன்மை மருந்தாளுநர், தொஅ மருந்தகம்-1, பெரம்பூர்) – கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை – ஆணை வழங்கல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்:560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ 1) துறை, நாள்:03.08.1977 மற்றும் அதன் தொடர்புடைய ஆணைகள்.
2. அரசாணை (நிலை) எண்:120, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ 1) துறை, நாள்:26.06.1995.
3. அரசாணை (நிலை) எண்:42, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ 1) துறை, நாள்:12.03.2007.
4. அரசாணை (நிலை) எண்:202, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ 1) துறை, நாள்:08.10.2007.
5. அரசாணை (நிலை) எண்:155, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ 1) துறை, நாள்:08.10.2007.
6. அரசாணை (நிலை) எண்:48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ 1) துறை, நாள்:26.02.2021.
7. அரசு கடித எண்:8755/ஏடி2/2021-1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்(ஏடி 2)துறை, நாள்: 16.03.2021.
8. இவ்வியக்கக பணி நியமன ஆணை ந.க.எண்:18900/தொஅ/அந/1/2019, நாள்: 18.06.2019.

*******

பெரம்பூர் தொஅ மருந்தகம்-1ல் தலைமை மருந்தாளுநராகப் பணிபுரிந்து, பணியில் இருக்கும் போதே 25.09.2012 அன்று காலமான திருமதி.ஞா.வைலட் தேவகுமாரி என்பவரது தற்காலிகப் பணி மருந்தாளுநர் பதவியில் 12.12.1980 முற்பகல் பணி வரன்முறைப்படுத்தப்பட்டு, 11.12.1982 பிற்பகல் தகுதிகாண் பருவம் முடித்துள்ளார். இறந்த அரசு ஊழியரின் பிறந்த தேதி 12.01.1960, அவர் ஓய்வு பெற வேண்டிய நாள் 31.01.2018 ஆகும். இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரரும் அவரது மகனுமான திரு.வி.வினோத் ராஜ்குமார் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி வேண்டி, உரிய கால கெடுவுக்குள், உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார்.